# மாகாணக் கல்வித் திணைக்களம்

# வடக்கு மாகாணம்

# க.பொ.த உயதரப் மாதிரிப் பரீட்சை -2020

# சித்திரக்கலை 2

## புள்ளித்திட்டம்

**வினா இல 01**

(i) *அமராவதி கலைமரபு ,குப்த கலைமரபு* *(02 புள்ளிகள்)*

(ii) *இல – 1 சிலையின் பின் பகுதியில் விமான வடிவமும் அவற்றிடையே சிறு பிரமான இருந்த நிலை புத்தர் சிலை அமைத்திருந்தல்.(பஞ்ச புத்த வடிவம்)*

- *இருந்த நிலை புத்தர் சிலைகளின் ஆசனத்தில் வஜிர குறியீடு அமைந்திருத்தல்.*
- *புத்தர் சிலையுடன் தொடர்புபடுத்தி தோரணம் அமைந்திருத்தல்.*
- *வித்தியாதாரக் குகையிள்ள புத்தர் சிலையின் பின் பகுதியில் பிரம்ம, விஷ்ணு தேவ வடிவம் காணப்படல்*

*(05 புள்ளிகள்)*

(iii) *ஊடகமாக மரம், செங்கற்கள், சீமெந்து பயன்படுத்தப்பட்டுள்ளது.*

- *புத்தர் சிலைகளில் சிரஸ்பத, திறந்த கண்கள் ஆடை அமைப்பு அலை இரேகைகள் மூலம் காட்டப்பட்டுள்ளதுடன் மகர தோரணம் என்பன காட்டப்பட்டுள்ளத. திறந்த கண்களுக்கு மாணிக்கக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளது. நீண்ட காதுகள் காணப்படுகின்றது.*
- *இந்து மற்றும் மகாயான கொள்கைகள் காணப்பட்டமை.*
- *தென் இந்திய இந்து சிற்பாசிரியர்களின் உதவி கிடைத்தமை.*
- *தேவர்களின் எண்ணக்கருக்களை வெளிப்படுத்த முயன்றுள்ளமை.*
- *கடலதெனிய புத்தசிலை, இலங்காதிலக புத்தசிலை உதாரணமாகும்* *( 08 புள்ளிகள்)*

***வினா 2***

(i) தாமரை மலர், பினரமலர், மல்லிகை மலர் வெட்டகை மலர் (தாழம்பூ), சபுமலர், அன்னாசி மலர், கத்தரி மலர், மானெல் மலர், **அரசமரம், அரளிமரம், தென்னைமரம், நாகலிங்கமரம், கித்துள் மரம், மாமரம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.** *(02 புள்ளிகள்)*

(ii)

- ஆடை ஆபரண அணிகளிலும் பின்னணி அமைத்தலிலும் வித்தியாசங்கள் காணப்படுகின்றன. பெண்களின் உருவங்கள் முக்கோடுகளை அணிந்துள்ளது. நாரிப் பகுதிகள் காட்டப்படாது உள்ளங்கால்வரை நீண்டு காணப்படும். ஆடைகளுடன் இவர்கள் காணப்படுகின்றனர். இந்த ஆடைகளில் அழகிய மலர்த்தொடர்களினால் ஆன அலங்கார வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. ஆண்களுடைய ஆடைகளிலும் அழகிய வேலைப்பாடுகள் காணப்படுகின்றன.
- போர்த்துக்கேயரும், டச்சுக்காரரும், உபயோகித்த வாள், துப்பாக்கி, கூசா, பீங்கான், ஈட்டி ஆகியனவும் தாழ்நிலச் சித்திரங்களில் காணப்படுகிறது. இவற்றை விட சித்திரங்களில் வீடுகளின் கூரைகளில் பல்கொத்து விளக்குகள் காணப்படுகின்றன.
- பின்னணி வர்ணம் சிவப்பிற்கு பதிலாக நீலம்,கறுப்பு வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டமை
- மரமுந்திரிகை, பனை, கமுகு தாவர வடிவங்கள் பயன்படுத்தப்பட்டமை
- பல்வேறு உடல் நிலைகள் உணர்வு வெளிப்பாடு காட்டப்பட்டிருத்தல்
- ஓரளவு முப்பரிமாண தன்மை காட்டப்பட்டமை *(05 புள்ளிகள்)*

(iii)

- கத்தழுவ பூர்வாராமலே ஓவியம் கண்டிக் காலத்தில் தாழ் பிரதேச மரபிற்கு ஏற்ப வரையப்பட்டு உள்ளன. இவற்றில் அந்நிய நாட்டு இயல்புகள், பண்புகளைப் பரவலாகக் காணக் கூடியதாக உள்ளன.
- இங்கு காணப்படும் சித்திரங்களிடையே படாசார, சுத்தசோம ஜாதகய, வெசந்தர ஜாதகய, தெளபத்த ஜாதகய, தேமிய ஜாதகய, கட்டகாரி ஜாதகய, சுள்ள தம்ப பான ஜாதகய போன்ற ஆக்கங்கள் மேற் குறிப்பிட்ட பண்புகளைக் கொண்டுள்ள சித்திரங்களுக்கு உதாரணமாகும்.
- இவற்றில் பெண்களைச் சித்தரிக்கும் பொழுது அந்நிய நாட்டு ஆடை ஆபரணங்களுடன் , அதிகமாகப் பெண்கள் மொக்காடு அணிந்தும் உள்ளனர்.
- பிள்னணியில் காணப்படும் பொருட்களிடையே பெட்டகம், மின்விளக்கு, கட்டடங்கள் என்பன வெளிநாட்டுப் பண்புகளைக் காட்டுகின்றன. உரோம இலக்கத் துடன் கூடிய மணிக்கூடு, குதிரை வண்டி என்பன பிறநாட்டுப் பண்புகளை வெளிப்படுத்திக் காட்டுகின்றன.
- பிரதான நுழைவாயில் விக்டோறியா மகாராணியின் உருவம் காணப்படல் *(08 புள்ளிகள்)*

*வினா -3*

(i) வெஸ்ஸகிரி, கிந்தகலை, மகியங்கனை , மிகிந்தலை *(02 புள்ளிகள்)*

(ii) சிகிரிய ஓவியங்கள் காவியச் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.

- காவியத்தில் குறிப்பிட்ட பெண்ணின் சிறப்பியல்பு ஓவியத்தில் காட்டப்பட்டுள்ளது.
- சிகிரியா பெணச் ஓவியங்கள் கவிதைக்கு ஓப்பானது என்பர் இதற்கு காரணம் இந்தப் பெண்கள் இயற்கைத் தோற்றத்திலும் மிகையான அழகுடன் காட்டப்பட்டுள்ளனர்.
- இப் பெண்களின் சிறுத்த இடை, பெருத்த மார்பகங்கள், மென் உதடுகள், நீண்ட அழகிய கண்கள் என்பன காவியங்களில் பெண்களை வர்ணிப்பதற்கு நிகரானது ஆகும்

*(05 புள்ளிகள்)*

(iii) பொலநறுவாக் காலத்திற்குரிய் திலங்கசிலை மனைச் சித்திரமும் கல்விகாரைச் சித்திரமும் சிகிரியாச் சித்திர மரபின் இறுதியாக உள்ள சித்திரங்கள் எனக் குறிப்பிடலாம். இச்சித்திரங்களில் காணப்படும் சித்திர நுட்ப முறையானது சிகிரியாச் சித்திரங்களுக்கு பெருமளவில் சமமானதாகும். 11வது நூற்றாண்டில் மகியங்கனையில் கிடைத்த சித்திரமும், 12வது நூற்றாண்டில் திம்புலாகல மாற வீதிக் குகைச் சித்திரமும் சிகிரியக் கலை மரபின் பண்புகளை வெளிக்காட்டுகின்றன.

- கருத்து வெளிப்பாடு, வர்ணப்பயன்பாடு, இரேகையைக் கையாண்டு உள்ள தன்மை, சிகிரிய சித்திரமரபின் அடிப்படைப் பண்பை வெளிப்படுத்துகின்றது.
- சிகிரிய ஓவியங்கள் மதச்சார்ப்பு அற்ற விடயத்தினை வெளிப்படுத்துகிறது
- திவங்க சிலைமனை ஓவியங்கள் மகாயான கோட்பாட்டின் அடிப்படையான விடயங்களை சித்தரிக்கிறது.
- தெய்வ அழைப்பு, தங்க ஏணி மூலம் சங்கிஸ்த புரத்திற்கு வருகை தரல் போன்ற ஓவியங்கள் உதாரணமாகும் *(08 புள்ளிகள்)*

**வினா -4**

(i) சித்தார்த்தர் இல்லரத்தை துறத்தல் ,புத்தபிரான் சங்கிஸ்த புர வருகை, ஜட்டிலதமனய, மாரயுத்தம் *(02 புள்ளிகள்)*

(ii) பாருத் செதுக்கலில் மாயாதேவியின் கனவு செதுக்கலில் மாயாதேவி வெள்ளை யானையை கனவு கான்பது போல காணப்பட அமராவதி செதுக்கலில் நால்வகைத் தேவர்களுடைய பட்டத்து இராணியான மாயாதேவியை அனோதப்த குளத்திற்கு அழைத்து சென்று குளிப்பாட்டும் விதம் காட்டப்பட்டுள்ளது. *(05 புள்ளிகள்)*

(iii) தேவதத்தன் என்ற மன்னன் புத்தரை கொல்லும் பொருட்டு அனுப்பப்பட்ட மதம் பிடித்த யானை மக்கள் மத்தியில் கலகம் செய்வதும், புத்தரை கண்டதும் வீழ்ந்து வணங்குவதும் சிறப்பமாக காட்டப்பட்டுள்ளது.

- ✶ வட்டவடிவமான தளத்தில் செதுக்கப்பட்டுள்ளது.
- ✶ பயம், மகிழ்ச்சி, கருணை போன்ற தன்மைகள் காட்டப்பட்டுள்ளது.
- ✶ மனித வடிவங்களில் உணர்வு வெளிப்பாடு சிறப்பாக காட்டப்பட்டுள்ளது.
- ✶ புத்தர் உருவமாக காட்டப்பட்டுள்ளது.
- ✶ அக்கால கோட்டை கொத்தளங்கள் காட்டப்பட்டுள்ளது.
- ✶ ஆடை ஆபரண வேலைப்பாடுகள் சிறப்பாக காட்டப்பட்டுள்ளது. *(08 புள்ளிகள்)*

***வினா -5***

(i) பூசாரி வடிவம்,ஆண்முண்டம்,நாட்டியக்காரன் *(02 புள்ளிகள்)*

(ii) உள்நகரம் வெளிநகரம் என சுவர்களால் பிரிக்கப்பட்டுள்ளது,இதன் வீடமைப்பு ,தெரு அமைப்பு, வடிகால் அமைப்பு பற்றி குறிப்பிடவேண்டும்.

- ✶ இரு நகரங்களும் ஒரே மாதிரியான திட்டத்தில் அமைந்துள்ள ஒவ்வொன்றுக்கும் மேற்கே ஓர் ''அரண்'' இருந்தது, இவ்வரணானது 30 அடி உயரமும் ஏறத்தாழ 400 x 200 யார் பரப்பும் உடைய செவ்வக வடிவமான ஒரு செயற்கை மேடையாகும். இதனைச் சூழ மதில் காவலாக அமைந்திருந்தன. இதன் மேலே பொதுக் கட்டடங்கள் எழுப்பப்பட்டிருந்தன. இது கோட்டை போன்று காணப்பட்டது.இதனால் இந் நகரங்கள் கோட்டைப் பகுதி நகரப்பகுதி என இரண்டு பகுதியாக காணப்பட்டது. கோட்டைப் பகுதியில் அரசர்கள் வாழ்ந்தாக கருதப்படு கிறது.

- ✶ கற்கட்டட அமைப்பு இல்லை செங்கற்களே வழக்கமாக பயன்படுத்தப்பட்டுள்ளது வீடுகள் ஆடம்பரமற்ற சிறிய, பெரிய, மாடி வீடுகளாக இருந்தன வீடுகளில் குளியலறை காணப்பட்டது.
- ✶ அரச மாளிகை எனக் கருதக்கூடிய பெரிய கட்டடமும் காணப்படுகின்றது. இவற்றை விட பொது நீராடு கேணியும் அதைச் சூழ ஆடை மாற்றுகின்ற அறைகளும் காணப்படுகின்றது.
- ✶ வீடுகள் பொதுக்கட்டடங்கள் என்பவற்றில் நீர் வடிகால் அமைப்புகள் சிறப்பாக செய்யப்பட்டுள்ளது. இவ்வடிகால் அமைப்புகள் தெரு வடிகால் அமைப்புடன் இணையுமாறு திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.

*(05 புள்ளிகள்)*

(iii) இம்முத்திரை சிவபெருமானின் பசுபதி வடிவமாக கருதப்படும்.

- ✶ கொம்புடன் கூடிய நிட்டையில் காணப்படும் உருவத்தைச் சூழ விலங்குருவங்கள் காணப்படு கிறது.
- ✶ இவ்வுருவின் தலையில் இரு கொம்புகளுடன் கூடிய தலையணி ஒன்றுள்ளது. ஆசனத்தின் கீழ் மான்கள், சுற்றி வரக் காண்டாமிருகம், புலி, யானை, எருது வடிவங்கள் காணப்படுகிறது.
- ✶ இது சிவபெருமானின் ஒரு பசுபதி (உயிர் களின் அதிபதியும், விவசாயத்துக்கான அதிபதியும்) மூர்த்தத்தை புலப்படுத்துவதாக ஜோன் மார்சல் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்.
- ✶ இதில் தெய்வ உருவம் முன்புறத் தோற்றத்திலும், ஏனைய பிராணிகளின் உருவங்கள் பக்கத் தோற்றத்திலும் படைக்கப்பட்டுள்ளன.

*(08 புள்ளிகள்)*

**வினா 6**

(i) பாரம்பரிய மரபு ரீதியான எகிப்திய சிலைகள்

- கப்ரே
- ஸ்பின்ஸ்
- ரகோடென் அரசனும் நேபேர்ட் அரசியும்
- ஸ்கிரைப் (கணக்காளர் / எழுத்தாளர்)
- இரண்டாம் ராம்சேஸ்
- மேன்குறேயும் அவர் மனைவியும் *(02 புள்ளிகள்)*

(ii) எகிப்திய சிற்பங்களில் காணப்படும் மரபு ரீதியான பண்புகள்

- விறைப்புத் தன்மை / கேத்திரகணிதப் பண்பு / செயல்பாட்டுத் தன்மை அற்றவை.
- நின்ற நிலையில் காணப்படும் ஆண் உருவம் ஒரு பாதத்தை முன்னால் வைத்தவாறு காணப்படல்.
- சோடி வடிவங்களில் ஆண் உருவம் ஒரு காலை முன்னால் வைத்தவாறும் பெண் வடிவம் இரு கால்களையும் சேர்த்து வைத்தவாறு காணப்படல்.
- பெண் ஆணின் இடையை அனைத்தவாறு காணப்படல்.
- ஆணின் வடிவிற்கு கட்டையான உடையும், பெண் வடிவிற்கு நீண்ட உடல் முழுவதும் மூடிய வகையில் உடை அணிந்திருத்தல்.
- நேராகக் காணப்படும் முகத்தில் கண்கள் விழித்தவாறு காணப்படல்.
- ஆண் வடிவங்களுக்கு கடும் வர்ணத்தையும், பெண் வடிவத்திற்கு மென்மையான வர்ணத்தையும் பயன்படுத்தி இருத்தல்.
- எகிப்திய சிலைகள் நின்ற நிலையிலும், ஆசனத்தில் அமர்ந்த நிலையிலும், முழங்கால் மடித்திருக்கும் நிலையிலும் நிர்மாணித்திருத்தல்.
- ஆசனத்தில் அமர்ந்திருக்கும் ஆண், பெண் வடிவங்கள் நேராகவும், விறைப்பாகவும் காணப்படல்.

*(05 புள்ளிகள்)*

(iii) எகிப்பதிய கலையில் பெரும்பாலும் காணப்படுவது பாரம்பரிய மரபிற்கு உட்பட்டு, நிர்மாணிப்புக்களை உருவாக்கப்பட்டவையாகும், சித்திரம், சிற்பம் செதுக்கள் போன்ற ஆக்கங்களில் இப்பண்புகளைக் காணலாம். எனினும் ஒரு கால கட்டத்தில் சகல மரபுரீதிகளில் இருந்தும் எகிப்தியக்கலை விலகி உள்ளதை அக்நோடன் (அமர்னா/ புதிய) காலத்தில் காணலாம்.

✶ இக் காலத்தில் சகல சம்பிரதாயங்களையும் அக்நோடன் மாற்றி அமைத்தான். அகநோக்குடன் சமய நம்பிக்கையின் அடிப்படையில் உருவான எண்ணக்கருக்களையும் மாற்றினார். கலை

ஆக்கங்களிலும் இம்மாற்றத்தை விளக்கமாகக்காணமுடியும். மரபிநின்று விலகி இயற்கைப் பண்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து சிற்பங்கள் சில இக்காலத்தல் நிர்மாணிக்கப்பட்டன.

- ✶ நெபர்ரிரி சிலை இக்காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட இயற்கைப் பிரமாணத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும் அழகியான நெபர்ரி அரசியினுடைய அழகை வெளிக்காட்டும் இந்த இயற்கை மனித வடிவ ஆக்கம் எகிப்திய கலைஞர்களிடம் காணப்பட்ட திறனை வெளிப்படுத்துகின்றது. நீண்ட அழகிய கழுத்து நீண்ட நாசி, மெல்லிய உடல்வாகு, கூர்மையான கண்கள் என்பன சிற்பத்தின் அழகிற்கு மெருகேற்றுவதுடன், அழகிய நீண் தலை அணியும் நிலையின் மதிப்பை வலுவடையச் செய்கின்றது.
- ✶ அதேபோல் அக்நோடனும், நெபர்ரிரியும் ஜோடியாக உள்ள சிலையும் மாற்றம் கொண்ட இக்காலத்து பண்புகளைக்கொண்ட சிறந்த சிலையாகும் றெகோரெப்பும் நொபேட்டும் ஜோடியாக உள்ள சிலையில் காணப்படும் மரபுரீதியான எகிப்திய பண்புகள் இச்சிலையில் காணப்படவில்லை. இயற்கைப் பிரமாணத்தின் அடிப்படையில் இச்சிலை அமைந்து உள்ளதே இதற்கு காரணமாகும். *(08 புள்ளிகள்)*

**வினா 7**

(i) பியற்றா, டேவிற், மோசஸ், இறக்கும் அடிமை *(02 புள்ளிகள்)*

(ii) வெண்கலத்தினால் இது அமைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் சாய்ந்திருக்கும் பெண் ஒருவரின் உடலமைப்பை அரூப வடிவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (இக் கருப்பொருளின் கீழ் இவர் பல சிற்பங்களை நிர்மாணித்துள்ளார்.)

- ✶ அக்கடமிக் கலையில் காணக்கூடிய இயற்பண்புகளுடைய உடலுக்குப் பதிலாக எளிமைப் படுத்தப்பட்ட பெண்ணுக்குரிய உடலுருவமொன்றின் பண்புகள் கொண்ட அமைப்பாக இது காணப்படுகிறது.

- ✶ பெண்ணின் உருவம் சுயாதீனமாக முழங்கைகளை நிலத்தில் ஊன்றி, தலையை உயரத்தி, சாயந்திருக்கும் தோற்றமொன்றுடன் காணக்கூடியதாக இருக்கிறது. அவளது உடலின் சில பகுதிகள் அகற்றப்பட்டுள்ளது. அதனால் உடலினூடாகப் பின்னணியைக் காணக்கூடியதாக உள்ளது. (உடலின் கோறைப் பகுதிகளினூடாக) *(05 புள்ளிகள்)*

(iii) றொடின் அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட சிற்பத் தொகுதியாகும்.

- ✶ கலேஸ் நகரத்தை விடுவிப்பதற்காக உயிர்தியாகம் செய்ய முன்வந்த தேசப்பற்றுடைய குடிமக்கள் ஆறு (06) பேர் இதில் குறிக்கப்பட்டுள்ளனர்.
- ✶ எட்வேட் மன்னன் கலே நகரத்தைக் கைப்பற்றிய போது நகர மக்கள் மொத்தத்தில் அழிவதைத் தடுப்பதற்காக இவ்வாறு (06) பேரும் முன்னிற்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

* இவர்கள் இறப்பதற்குத் தயாராகக் கழுத்தில் கயிற்றைக் கட்டி, தலைக்கவசம், பாதணிகள் எதுவுமின்றி இருக்கின்றனர்.
* அமைதியான முறையில் சிந்தனை, விதி, கலகம், வீரமரணம் எனப்படும் பாவ உணர்வுகள் வெளிப்படுத்துவதாக இவை உள்ளன.
* சிற்பத்தின் ஒட்டு மொத்த அசைவைக் கருதும்போது அவர்கள் மெல்ல மெல்ல முன்னோக்கி செல்லும் சுபாவத்தை வெளிப்படுத்கின்றன.
* உயிர்நிலை பருமனுடன் வடிவமைக்கப்பட்ட இச்சிற்பம் மனப்பதிவு வாதப்பண்புகளைக் கொண்டது. அதாவது மேற்பரப்புத் தன்மை மாறுபட்ட இயல்புகளைக் கொண்டுள்ளது.

(08 புள்ளிகள்)